**செய்தி வெளியீடு எண்:1199** **நாள்:25.11.2021**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு அமைச்சர் (ஆதிதிராவிடர் நலம்) அவர்கள் 2021-22ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின் போது கீழ்க்கண்ட அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

"கடலூர் மாவட்டம் விருத்தாச்சலம், கள்ளக்குறிச்சி மாவட்டம், கள்ளக்குறிச்சி மற்றும் நாகப்பட்டினம் மாவட்டம் நாகப்பட்டினம் ஆகிய இடங்களில் மூன்று புதிய கல்லூரி மாணவியர் விடுதிகள் ரூ.2 கோடி செலவில் தொடங்கப்படும்"

2. கடலூர் மாவட்டம், விருத்தாச்சலம், கள்ளக்குறிச்சி மாவட்டம், கள்ளக்குறிச்சி மற்றும் நாகப்பட்டினம் மாவட்டம் நாகப்பட்டினம் ஆகிய மூன்று இடங்களில் தலா 50 மாணவியர்கள் வீதம் தங்கிப் பயில ஏதுவாக மூன்று ஆதிதிராவிடர் நல கல்லூரி மாணவியர் விடுதிகள் ரூ.1,06,34,604/- (ரூபாய் ஒரு கோடியே ஆறு இலட்சத்து முப்பத்து நான்காயிரத்து அறுநூற்று நான்கு மட்டும்) செலவில் தோற்றுவிக்க நிருவாக அனுமதி அளித்து, அரசாணை (நிலை) எண்.91 ஆதி(ம)பந(ஆதிந.4) துறை, நாள் 22.11.2021 இல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

க. மணிவாசன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9**